பக்கங்கள் - 10

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

மின்னிதழ்

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 20 ஞாயிற்றுக்கிழமை (03.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 136

## 275 கடற்படையினருக்கும் அவர்களது 21 உறவினர்களுக்கும்

### கொரோனா வைரஸ் உறுதி

(கொழும்பு)

வெலிசறை கடற்படை முகாமையைச் சேர்ந்த 275 படையினரும், அவர்களின் 21 உறவினர்களும் கொரோனா வைரஸ் தொற்றுடன் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா 02

## கொரோனா தொற்று தொடர்பான உண்மையை மறைக்கும் அவசியம் இல்லை



### தொற்று நோய் பிரிவு பணிப்பாளர் பபா பலிஹவதன

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் சுகாதாரத்துறையினர் தவறான தகவல்களையோ அல்லது உண்மைக்குப் புறம்பான தகவல்களையோ ஒரு போதும் வெளியிடமாட்டார்களென சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு பணிப்பாளர் பபா பலிஹவதன தெரிவித்தார்.

அவர்கள் உண்மைகளை மறைத்து தகவல்களை வெளியிடுவதாக சில ஊடகங்கள் மூலம் தெரிவிக்கப் 02

## ஜுன் 20இல் தேர்தல் நடைபெறாது

# தேர்தல் நடத்துவதானால் சட்டங்களில் திருத்தம் தேவை

● பெரும் சிக்கலில் வேட்பு மனுக்கள்

### தேர்தல் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

ஜூன் 20இல் பொதுத் தேர்தல் பெரும்பாலும் நடைபெறாது என தெரிவித்துள்ள தேர்தல் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ததில் சட்ட சிக்கல்கள் காணப்படுவதால் பாராளுமன்ற தேர்தல் நடத்துவதற்கு தேர்தல் சட்டங்களில் திருத்தம் தேவை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## கொரோனா வைரஸ் சமூகத்தில் பரவுவதை பூஜ்ஜிய நிலைமைக்கு கொண்டுவர முடியாது



### சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க

(கொழும்பு)

கொரோனா வைரஸ் சமூகத்தில் பரவலை பூஜ்ஜிய நிலைமைக்கு கொண்டுவர முடியாது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார். கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தப்பட்ட மட்டத்தில் இருந்தாலும் அந்த நோய் பரவல் பூஜ்ஜியமாக்கப்பட்டுள்ளது என்பது அதன் அர்த்தமல்ல என்றும் தெரிவித்தார். 02

## யாழ். இந்து பழைய மாணவன்

கொரோனாவால் பிரித்தானியாவில் பலி



02

## 2ம் கட்டமாக 5 ஆயிரம் ரூபாய்

(கொழும்பு)

மிக விரைவில் 5ஆயிரம் ரூபாய் வழங்கும் இரண்டாவது கட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தெரிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 02

## குணமடைந்து வீடு திரும்பியவருக்கு மீண்டும் கொரோனா தொற்று

(கொழும்பு)

ஜாஎல பகுதியில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு குணமடைந்த ஒருவருக்கு மீண்டும் கொரோனா தொற்றுத் தாக்கம் இருப்பதாக உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மார்ச் 17ஆம் திகதி அங்கொடவில் உள்ள ஐ.டி.எச் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் கொரோனா நோய்க்கு சிகிச்சை பெற்றதன் பின்னர் குணமடைந்தார். பின்னர் ஏப்ரல் 17ஆம் திகதி அன்று வீடு திரும்பினார்.

இதன் பின்னர் திடீரென நேற்று மார்பு வலி காரணமாக அவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 02

## கொரோனாவால் 702 பேர் பாதிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 12 பேர் நேற்று சனிக்கிழமை இரவு 02

தமிழ் மக்களுக்கு கொரோனாவை பரப்பவா

## வட மாகாணத்தில் இராணுவத்தினரின் தனிமைப்படுத்தல் முகாம்கள் அமைப்பு

### நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கேள்வி



(யாழ்ப்பாணம்)

கொரோனா அபாய காலத்தில் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற செயற்பாடுகள் என்பது தமிழ் மக்கள் மத்தியில் பலத்த கேள்விகளை எழுப்பியிருப்பதுடன் 02

கொரோனா அபாய வலயத்திலிருந்து

## காதலியை அழைத்துவந்த பொலிஸ் உத்தியோகத்தர் பணி நீக்கம்

(கொழும்பு)

கொரோனா அபாய வலயத்தில் இருந்த தனது காதலியை இரகசியமாக அழைத்து வந்து, தனது உறவினர் வீட்டில் தங்க வைத்திருந்த பொலிஸ் உத்தியோகத்தர் பணியிலிருந்து இடைநீக்கப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு கொரோனா அபாய வலயத்தில் இருந்த காதலியை அழைத்து வந்து மாத்தறையிலுள்ள தனது உறவினர் 02

## கொரோனா...

கொரோனா வைரஸ் பரவு வதை கட்டுப்படுத்தி, சமூக இடை வெளியை பேணி அன்றாட பணிகளில் ஈடுபடுவதை தற்போது செய்ய வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

உலகில் உருவான ஏனைய தொற்று நோய்களை போன்று கொரோனா வைரஸ் தொற்று நோயும் எதிர்காலத்திலும் தோன்றி மறைந்து சமூகத்திற்குள் இருந்து கொண்டிருக்கும்.

மனிதர்களுக்கு ஏற்படும் ஒரே நோய் கொரோனா அல்ல. மேலும் பல நோய்களை கட்டுப்படுத்தி, மக்களின் இயல்பு வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்கிறோம்.

ஏனைய நோய்கள் குறித்த கவனம் குறைவாக இருக்குமாயின் அதுவும் ஆபத்து.

கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அல்லது மூன்றாவது அலை ஏற்படக் கூடும். அது ஆரம் பத்தை போன்று கடுமையானதாக இருக்காது எனவும் அனில் ஜாசிங்க குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## யாழ். இந்து பழை...

கொரோனா தாக்கத்தினால் மேலுமொரு ஈழத் தமிழர் பிரித் தானியாவில் உயிரிழந்துள்ளார்.

லோகசிங்கம் பிரதாபன் என்ப வரே நேற்று உயிரிழந்துள்ளார். இவர் யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். (ம-3)

## 275 கடற்படை...

தெரிவித்தார்.

275 கடற்படையினரில் 217 பேர் வெலிசறை கடற்படை முகா முக்குள் இருந்தும், 58 பேர் விடு முறையில் வீடு சென்றிருந்த நிலை யிலும் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று முன்தினம் அடையாளம் காணப் பட்ட 25 நோயாளர்களில் 18 பேர் வெலிசறை கடற்படை முகாமை சேர்ந்த சிப்பாய்கள் எனவும், ஏனைய 7 பேரில் 6 பேர் கடற்படையினரின் உறவினர்கள் எனவும் அவர் கூறி னார்.

கடற்படையினரின் உறவினர் களான 6 பேரில் 4 பேர் ஒரே குடும் பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் கிளிநொச்சி, நாச்சிக் குடாவில் உள்ள கடற்படை தனி மைப்படுத்தல் நிலையத்தில் தங் கவைக்கப்பட்டிருந்த போதைப் பழக்கத்துக்கு அடிமையான ஒரு வரும் நேற்று அடையாளம் காணப் பட்டவர்களில் அடங்குகின்றார் என வும் அவர் மேலும் கூறினார். (ம-3)

## காதலியை அழைத்...

வீட்டில் தங்க வைத்திருந்து தொடர்பை பேணிய குற்றச்சாட்டில் மாத்தறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தி யோகத்தர இடைநீக்கம் செய்யப் பட்டுள்ளார். (ம-3)

## 2ம் கட்டமாக 5...

மக்களுக்கு ஊரடங்கு வேளையில் 5ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் அதன் இரண்டா வது கட்டம் ஆரம்பிக்கப்படவுள்ள தாக ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தெரிவிக்கின்றது.

கொழும்பில் நேற்று சனிக் கிழமை பகல் நடத்திய பத்திரிகை யாளர் சந்திப்பில் பேசிய அக்கட்சி யின் சட்டத்தரணி தொலவத்த இத னைத் தெரிவித்தார். (ம-3)

# ஏப்ரல் மாதத்தில் மட்டும் 522 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் 522 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தத் தகவலின் அடிப்படை யில் மார்ச் மாதம் 31 ம் திகதி 143 ஆக இருந்த கொரோனா தொற் றாளர்களது எண்ணிக்கை ஏப்ரல் மாதம் 30ஆம்திகதி 665 ஆக உயர் வடைந்துள்ளது.

இதனடிப்படையில் கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் 522 பேருக்கு புதிதாகக் கொரோனா தொற்று ஏற் பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இதுவரையான காலகட்டத்தில் அதிகபட்சமான கொரோனா தொற் றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நாளாக ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி அமைந்துள்ளது. அன்று 65 பேர் புதிதாக இனங்காணப்பட்டிருந்த னர். ஏப்ரல் மாதத்தில் கொரோனா தொற்றாளர்கள் எவரும் இனம் காணப்படாத நாளாக ஏப்ரல் 16ஆம் திகதி அமைந்துள்ளது.

அதேபான்று கொரோனா தொற்று ஏற்பட்ட இலங்கையர் ஒருவர் இனம் காணப்பட்ட மார்ச் மாதம் 11 முதல் இதுவரை மூன்று நாட்கள் மட்டுமே எந்தவொரு நபருக்கும் கொரோனா தொற்று கண்டறியப் படாத நாளாக அமைந்துள்ளது.

மார்ச் மாதத்தின் 25 மற்றும் 27 ஆகிய இரு நாட்களிலும் ஏப்ரல் 16 ஆகிய மூன்றுநாட்களில் மட் டுமே எந்தவொரு கொரோனா தொற்றாளரும் இலங்கையில் கண் டறியப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 702 பேர் பாதி...

அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட் டோரின் எண்ணிக்கை 702ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

172 பேர் முழுமையாகக் குண மடைந்து வீடு திரும்பியுள்ளனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

523 பேர் வைத்தியசாலை களில் சிகிச்சை பெற்று வருகின்ற னர். (ம-3)

## குணமடைந்து...

நோயாளி மீண்டும் பி.சி.ஆர் பரிசோதனைக்குள்ளாக்கப்பட்டார். அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது நேற்று தெரிய வந்தது.

பின்னர் மேலதிக சிகிச்சைக் காக அங்கொடவில் உள்ள ஐ.டி.எச் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள் ளார். (ம-3)

## மே 11 ஆம் திகதி முதல்

# மணல் ஏற்றிச் செல்வதற்கான பெர்மிற் நடைமுறைப்படுத்தப்படுகிறது



(கொழும்பு)

மணல், மண் மற்றும் கிரவல் உள்ளிட்ட கனிம வளங்களை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப் பத்திரம் அவசியம் என்ற நடை முறை மே 11ஆம் திகதி முதல் நடை முறைப்படுத்தப்படுகிறது.

இந்தப் போக்குவரத்து அனு மதி ஏற்கனவே உள்ள சுற்றறிக் கையின் பிரகாரம் வழங்கப்படும் என்று புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல தெரிவித்தார்.

போக்குவரத்து அனுமதி வழங்கு வதற்கு ஏற்கனவே இருக்கும் நடைமுறைகளைப் பின்பற்றி நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

தற்போதுள்ள சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அமைய போக்கு வரத்து அனுமதிப்பத்திரம் பெற பொதுமக்கள் பணியகத்திற்கு வரவேண்டிய தேவையில்லை என்பதற்கான ஒரு பொறி முறையை செயல்படுத்தப் படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் பிரதேச அலுவல கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் புவியியல் மற்றும் சுரங் கப் பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல தெரிவித்தார். (ம-3)

## வட மாகாணத்தில் இராணுவத்...

சந்தேகங்களையும் உண்டு பண் ணியிருப்பதாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ் வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் வாழும் பிரதே சங்களிலேயே படையினருக்கான தனிமைப்படுத்தல் நிலையங் களை அமைப்பதானது இங்குள்ள மக்களுக்கும் கொரோனா வைப் பரப்புதான ஒரு எண்ணமா அல் லது சர்வாதிகார ஆட்சிக்கு அடித் தளமாக அமையப்போகிறதா என் றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொரோனோ நிலைமைகளில் அரசாங்கம் முன்னெடுத்து வரு கின்ற நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது.

கொரோனா வைரஸின் தாக் கம் உலக ரீதியாக எம்மால் உண ரப்பட்டு வருகிறது. வடக்கு கிழக்கு மாகாண தமிழர்களைப் பொறுத்த வரையில் இந்தக்கால கட்டத்தை வேறு காரணங்களுக்காகவும் பதவியில் உள்ளோர்கள் பாவிக்கப் பார்க்கின்றார்களா என்ற பயம் எம் மைப் பீடித்து இருக்கின்றது.

அதாவது கொரோனா வைர ஸின் தாக்கத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படும் இராணுவத்தினரை எதற்காக தமிழ் மக்கள் வாழும் பிரதேசதங்களில் தமிழ் மக்கள் மத்தியிலே அடையாளம் காட்டி அங்கு படையினர்களைக் கொண்டு வந்து வைக்கின்றார்கள் என்ற கேள்வி எழுகின்றதுடன் அது பலத்த சந்தேகங்களையும் உண் டாக்குகின்றது.

குறிப்பாக இங்கிருப்பவர்களுக்கு கொரோனா குறைந்தவாறு இருக் கும் நிலையிலே அங்கு தொற்று சந்தேகத்திலுள்ளவர்களையும் இங்கு கொண்டு வந்து வைத்து இங்குள்ள வர்களுக்கும் கொரோனாவைக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு எண்ணமா?

அல்லது இதை அடிப்படையாக வைத்து வரப் போகும் ஒரு சர்வாதி கார ஆட்சிக்கு அடித்தளமாக அமையப் போகின்றதா என்று பல விதமான கேள்விகள் எங்கள் மன தில் எழுந்து கொண்டிருக்கின்றன.

எங்கள் வைத்தியர்கள் தாதி யர்கள் என சுகாதார துறையினர் உன்னதமான சேவையில் ஈடு பட்டு வருகின்றார்கள். ஆனால் அதற்கு அப்பால் அரசியல் ரீதியாக பல்வேறு நடவடிக்கைகள் நடை பெற்று வருவதைப் பார்க்கும் போது இந்தக் கொரோனாவை தங்கள் தனிப்பட்ட அரசியலுக்காக பாவிக்க சிலர் முற்படுகின்றனரா என்ற சந் தேகம் எம்மை வாட்டிக் கொண்டி ருக்கின்றது. இந்த சந்தேகத்தை நீக்குவது அரசாங்கத் தரப்பின் கடமையாகும்.

தமிழ் மக்களிடையே அதாவது குறைந்தபட்சத்தில் கொரோனா வால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களி டையே அங்கிருந்து கொரோனா சந்தேகத்தில் கொண்டுவந்து தனித்து வைக்க பார்ப்பது வருங்காலத்தில் தமிழ் மக்களுக்கு எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது ஒருபுறமிருக்க மத்தள விமான நிலையத்தில் போதிய இடவசதி உள்ளிட்ட பல வசதிகள் எல்லாம் இருக்கிறது. ஆகவே அங்கு கொண்டு சென்று இராணுவத்தினரை பரா மரிக்காமல் இங்கு ஏன் மக்களி டையே மக்களினை மையமாக வைத்து அவர்களைச் சுற்றி படை யினரை வைக்க எத்தனிக்கிறார் கள் என்று பார்க்கும் போது பல் வேறு அரசியல் காரணங்கள் இதற்கு அடிப்படைக் காரணங்களாக இருக் கக் கூடுமோ என்ற எண்ணங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

ஆகவே இந்தச் சந்தேகங் களை எல்லாம் தீர்க்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இருக் கின்றது. அவற்றைத் தீர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றேன் என் றார். (ம-3)

## கொரோனா தொற்று தொட...

படும் குற்றச்சாட்டுக்களை நிரா கரித்த அவர் அதற்கான அவசியம் அவர்களுக்கு கிடையாது என்றும் தெரிவித்தார்.

பரிசோதனைக் கூடங்களின் மூலம் உண்மையான தகவல்கள் கிடைத்ததும் உடனடியாக அத் தகவல்கள் அரசாங்க தகவல் திணைக்களத்திற்கும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத் திற்கும் வழங்கப்படும் நிலையில் அவர்கள் மூலமே ஊடகங்களுக்கு செய்திகள் வெளிப்படுத்தப்படு கின்றன என்றும் அவர் குறிப்பிட் டார்.

அத்துடன் தவறான தகவல் களை வெளியிடும் சில ஊடகங் களின் செயற்பாடுகளையே கட்டுப் படுத்த வேண்டும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அது தொடர்பில் மேலும் தெரி வித்த அவர்,

பிரதேச மட்டத்தில் வைரஸ் தொற்று சந்தேக நபர்களை இனம் காண்பதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு முன்னெடுத்து வருகின்றது. அந்த நடவடிக்கை களில் சுகாதாரத்துறை அதிகாரி கள் மற்றும் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

எவ்வாறெனினும் அவ்வாறான சந்தேகத்துக்கிடமான நபர்கள் இருப்பார்களானால் அது தொடர் பில் அயலில் அவர்கள் சுகாதார அமைச்சுக்கு அறிவிப்பது அவசிய மாகுமென்றும் அவர் தெரிவித் தார்.

அதேவேளை நாட்டில் மீண் டும் எலிக்காய்ச்சல் உருவாகி வருவதாக அறியக் கிடைத்துள் ளது. விவசாயிகள் இக்காலகட்டங் களில் மிக அர்ப்பணிப்புடன் விவ சாய நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ள நிலையில் அதன் மூலம் அவர்களுக்கு பாதிப்புகள் ஏற்படுமா? அல்லது சுகாதார அமைச்சு என்ற வகையில் அவர் களுக்கு வழங்கப்படும் ஆலோ சனை என்ன? என அவரிடம் கேள்வி எழுப்பிய போது அதற்குப் பதிலளித்த அவர், எமது நாட்டில் சில தொற்று நோய்கள் தொடர்பில் அவ்வப்போது தகவல்கள் வெளியிடப் பட்டு வருகின்றன.

தொற்று நோய்களை பொறுத்த வரையில் எமது நாட்டில் அவை கட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளன. விவசாய நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ளவர்கள் அதற் கான அறிகுறிகள் தென்படுமாயின் உடனடியாக மருத்துவ ஆலோ சனைகளைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும் என்றும் அவர் தெரி வித்தார். (ம-3)

## தேர்தல் நடத்துவதானால் சட்ட...

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை மார்ச் மாதம் 12ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதி வரை தாக்கல் செய்ய முடி யும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

கொரோனாத் தாக்கம் காரண மாக மார்ச் மாதம் 16ஆம் திகதி விடுமுறை என்று அரசு அறிவித் திருந்தது. அன்றைய தினம் வேட்பு மனுத் தாக்கல் இடம்பெறாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவும் அறிவித்திருந்தது. மார்ச் 17ஆம், 18ஆம் மற்றும் 19ஆம் திகதிகளில் வேட்புமனுத் தாக்கல் இடம்பெற் றது.

இந்தத் திகதிகளிலேயே நாடு முழுவதும் முக்கிய அரசியல் கட்சி கள் எல்லாம் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தன. ஆனால் இந்த மூன்று திகதிகளும் விசேட பொதுவிடுமுறையாக பொது நிர் வாக உள்நாட்டலுவல்கள் அமைச் சரால் மார்ச் 17ஆம் திகதியிடப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தற்போதே தேர் தல்கள் ஆணைக்குழுவுக்கும் தெரியவந்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார். விடுமுறை அறிவிக்கப்பட்ட நாட்களில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களின் வலுத் தொடர்பில் சட்டரீதியான சிக்கல் எழுந்துள்ளது.

இந்த மூன்று நாட்களிலும் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் மீண்டும் தாக்கல் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும், இதன் காரணமாக ஜூன் 20ஆம் திகதி தேர்தல் நடத்தப் படாது என்றும் தேர்தல்கள் திணைக் கள வட்டாரங்கள் தகவல் வெளி யிட்டன. (ம-3)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.05.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

### புதுக்குடியிருப்பு நகர் பகுதியில்

# ஒரு தொகுதி ஆயுதங்கள் மீட்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் ஒரு தொகுதி ஆயுதங்கள் நேற்று மீட்கப்பட்டது.

குறித்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் உள்ள சுனாமி நினைவாலயத்திற்கு முன்னால் உள்ள வீதி ஓரத்தில் போர் நடைபெற்ற காலத்தில் ஆயுதங்கள் புதைக்கப்பட்டதாக நம்பப்படும் இடம் ஒன்று நேற்று பொலிஸாரால் தோண்டப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் அனுமதியுடன் குறித்த பகுதி நேற்று காலை சிறப்பு அதிரடிப் படையினரால் பெக்கோ இயந்திரம் கொண்டு தோண்டப்பட்டுள்ளது.

இதன்போது போர் நடைபெற்ற காலத்தில் புதைக்கப்பட்ட மூன்று ஆர்.பி.ஜி. எறிகணைகள் உள்ளிட்ட வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெடிபொருட்கள் சிறப்பு அதிரடிப் படையினரால் தகர்த்து அழிக்கப்படவுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3)

### - குடத்தனையில் மணல் கடத்தல் விவகாரம் -

# கைது செய்யப்பட்ட 4 பெண்களும் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு, குடத்தனை - மாளிகைத் திடலில் அரச உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் ஊரடங்குச் சட்டத்தை மீறியமை ஆகிய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட 4 பெண்களையும் பிணையில் விடுவித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

"மணல் கடத்தல் கும்பல்களை நாம் ஆதரிக்க முடியாது. அவர்கள் சட்டத்தினால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

ஆனால் எந்தக் குற்றமும் செய்யாத பெண்களைத் தாக்க பொலிஸாருக்கும் உரிமை இல்லை. இந்த விடயம் பாரதூரமான மனித உரிமை மீறல். அத்துடன், ஊரடங்குச் சட்ட வேளையில் பருத்தித்துறை வைத்தியசாலை பாஸுடன் தான் இரண்டு பெண்களும் வைத்தியசாலைக்கு உணவு எடுத்துச் சென்றனர்.

அதன்போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்" என்று சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் நீண்ட சமர்ப்பணத்தை நீதவான் முன்னிலையில் முன்வைத்தார்.

அதனடிப்படையில் பொலிஸாரின் கடும் ஆட்சேபனையின் பின் சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கி பதில் நீதவான் உத்தரவிட்டார். (ம-3)

உங்கள் விளம்பரங்களை
வலம்புரி இல் பிரசுரிப்பதற்கு
எம்முடன் தொடர்பு கொள்க
076 097 3127
076 636 3378
Valampurii@yahoo.com
குறைந்த கட்டணங்களில் பிரசுரிக்க முடியும்

# கொரோனா COVID - 19

## இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் | சிகிச்சை பெற்று வருபவர்கள் |
|---|---|---|---|
| 702 | 172 | 007 | 523 |

## உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 3,457,511 | 1,102,914 | 243,200 |

| நாடுகள், உலகம் | மொத்த பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | மொத்த மரணம் | இன்றைய மரணம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 3,457,511 | +59,417 | 243,200 | +3,752 |
| ஐ.அமெரிக்கா | 1,147,588 | +16,558 | 66,650 | +897 |
| இத்தாலி | 209,328 | +1,900 | 28,710 | +474 |
| ஸ்பெய்ன் | 245,567 | +2,588 | 25,100 | +276 |
| சீனா | 82,875 | +1 | 4,633 | 0 |
| ஜேர்மனி | 164,478 | +401 | 6,736 | - |
| பிரான்ஸ் | 168,396 | +1,050 | 24,760 | +166 |
| ஈரான் | 96,448 | +802 | 6,156 | +65 |
| ஐ.இராச்சியம் | 182,260 | +4,806 | 28,131 | +621 |
| இந்தியா | 37,776 | +519 | 1,223 | - |

இன்று அதிகாலை 12.20 நிலைவரப்படி

# மூதறிஞர் ஆ.சபாரத்தினம் மாஸ்ரரின் மறைவு தமிழ் உலகுக்கு பேரிழப்பு

## கலாநிதி ஆறு.திருமுருகன் இரங்கல்

மூதறிஞர், சைவசித் தாந்த வித்தகர். ஆ.சபாரத் தினம் அவர்களின் பிரிவுச் செய்தி சைவ மக்களுக்கு மிகுந்த கவலை தரும் செய்தி யாகும் என தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பி லேயே மேற்படி விடயம் தெரி விக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது.

கடந்த எழுபது ஆண்டு களுக்கு மேலாக சைவசித் தாந்தத்தையும், தமிழ் இலக்கண இலக்கியத்தை யும் பலருக்குக் கற்பித்த நல்லாசானும் பல வரலாற்று நூல்கள் அச்சேறுவதற்கு அயராது தொண்டாற்றிய வருமாகிய மூதறிஞர் ஆ.சபா ரத்தினம் ஐயா அவர்களின் பிரிவு குறித்து மிகுந்த கவலையடைகிறேன்.

பண்டிதமணி மற்றும் மௌனமுனி பெ.கைலாச பதி போன்றவர்களின் ஆக்கங்களை அச்சேற்றுவதில் அயராது உழைத்த பெருந்தகை. பல பல்கலைக்கழக மாணவர்கள் , விரிவுரையாளர்கள் ஆய்வுபணி களில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில், இப்பெருந்தகை அவர்களின் பங் களிப்பை பெறத் தவறவில்லை. எவர்க்கும் எவ்வேளையும் நட மாடும் நூலகமாக உதவிய பேரறி ஞரின் பிரிவு ஈடுசெய்ய முடியாது.

நாரந்தனையில் பிறந்து நீண்ட காலம் கரம்பொன்னில் வாழ்ந்த இவர், கரம்பொன் சண்முகநாதன வித்தியாலயத்தில் அதிபராக நீண்ட காலம் பணியாற்றிய வர். இவரது சேவையைப் பாராட்டி பல நிறுவனங்கள் இவரைக் கௌரவித்துச் சிறப்பித்தன.

யாழ்.பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவிலும் இவருக்கு சிறப்பான கௌர வம் வழங்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

ஆங்கில இலக்கிய புலமைமிக்க இவரை சுவீட னிலுள்ள உப்சலாப் பல் கலைக்கழகம் 1989 இல் சிறப்பு ஆய்வாளராக அழை த்து இவரது ஆற்றலைப் பெருமைப்படுத்தியது. மிகச் சிறந்த புலமையாளராகிய இப்பெரியாரின் பணிகள் என்றும் மறக்க முடியாதவை என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.



## பேராசிரியர் என்.சண்முகலிங்கன் இரங்கல்

“எங்கள் புலமை மரபின் தனித்துவ ஆளுமை பேரசான் ஆ.சபாரத்தினம் அவரின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்” என யாழ்ப்பாணப் பல் கலைக்கழக முன்னாள் துணைவேந் தர் பேராசிரியர் கலாநிதி என்.சண்முக லிங்கன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள இரங்கல் செய்தியில் தெரி வித்துள்ளதாவது,

பண்பாட்டு அறிவின் மூலங்களை அறிவார்ந்து ஆழத் தேடி எங்கள் புலமை மரபுக்கு செழுமை சேர்த்தவர் பேரசான் ஆ. சபாரத்தினம் அவர்கள். ஆய்வும் தேடலும் அவர் வாழ்வின் தவமாகவே அமைந் திருந்தது.

முன்னைப்பழமையும் பின்னைப் புதுமையும் அழகாய் இசைந்த அவரின் ஆளுமை தனித்துவமானது. எங்கள் பல்கலைக்கழக மரபுவழி ஆய்வுப் பண்பாட்டு மேம் பாட்டில் அவரின் பங்கும் பணியும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறே சுவீடன், உப் சலாப் பல்கலைக்கழக ஆய் வுப் பணிகளின் வழி வெளிப் பட்ட மானிடவியல் போன்ற நவீன அறிவியல் சார்ந்த அவரது ஞானம் மேலானது.

ஆடம்பரமில்லாத எளி மையான அதேவேளையில் அறிவுத் துணிவும் சமூக உணர்திறனும் மிக்க அவ ரின் வாழ்வும் பணியும் ஈடி ல்லாதது என்றென்றும் வழி காட்டியானது என அவரின் இரங்கல் செய்தியில் தெரி விக்கப்பட்டுள்ளது.

# முல்லை தனிமைப்படுத்தல் நிலையத்தில் உயிரிழந்தவருக்கு கொரோனா இல்லை

(முல்லைத்தீவு)

முல்லைதீவில் கடற் படையினரின் கட்டுப்பாட் டில் உள்ள தனிமைப்படுத் தல் நிலையத்தில், தனி மைப் படுத்தப்பட்டிருந்த இரு வயோதிபர்கள் உயிரிழந் திருந்த நிலையில், அவர் களில் ஒருவருக்கு கொரோனா இல்லை என முன்னெடுக் கப்பட்ட பி.சி.ஆர்.பரிசோத னைகளின் போது உறுதி யாகியுள்ளது.

இந் நிலையில் மற்றைய வர் தொடர்பில் முன்னெடுக் கப்பட்ட பி.சி.ஆர். பரி சோதனையின் முடிவுகள் நேற்றிரவு வரை கிடைக்கப் பெற்றிராத நிலையில், அவ ரது பி.சி.ஆர். முடிவும் கிடைக்கப் பெற்ற பின்னர் பிரேத பரிசோதனையும் முன்னெடுக்கப்பட்டு மர ணத்துக்கான காரணம் வெளிப்படுத்தப்படும் என விமானப்படை ஊடகப் பேச் சாளர் குறூப் கப்டன் துஷான் விஜேசிங்க தெரி வித்தார்.

அண்மையில் புறக் கோட்டை - குணசிங்கபுர பகுதியில் இருந்து தனிமைப் படுத் தலுக்காக அழைத்துச் செல்லப்பட்ட யாசகர்கள் உள்ளிட்ட குழுவில் உள்ள டங்கிய இருவரே நேற்று உயிரிழந்திருந்தனர்.

(ம-3)




### தாய் இறந்த துயரம் தாங்காது

# விபரீத முடிவெடுத்த மகன்

## சிகிச்சை பலனின்றி நேற்று மரணம்

(யாழ்ப்பாணம்)

தாய் இறந்த துயரம் தாங்காது மகன் தனக்கு தானே தீ மூட்டியதில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் பொலிகண்டி கிழக்கு வல்வெட்டித்துறை பகுதியை சேர்ந்த இராமநாதன் டிலக்சன் (வயது-14) என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 3 மாதத்திற்கு முன்னர் குறித்த சிறுவனின் தாயார் உயிரிழந்துள்ளார். தாயார் உயிரிழந்ததை தொடர்ந்து குறித்த மாணவன் மன விரக்தியில் இருந்துள் ளார்.

இந்நிலையில் கடந்த 29ம் திகதி வீட்டில் ஒருவரும் இல்லாத நிலையில் தனக்கு தானே மண்ணெண்ணெய் ஊற்றி தற் கொலைக்கு முயன்றுள்ளார்.

தீக்காயங்களுக்கு உள்ளான சிறுவன் உடனடியாக மந்திகை வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளான். அன்றைய தினமே மாலை யாழ் போதனா வைத்திய சாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற் றப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலை யில் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த உயிரிழப்பு தொடர்பான விசார ணைகளை யாழ் போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதி காரி நமசிவாயம் பிறேம்குமார் மேற் கொண்டார்.

(ம-3,9)

# தனிமைப்படுத்தப்பட்ட வீடுகள் வவுனியாவில் விடுவிப்பு

(வவுனியா)

வவுனியா மகாகச்சக்கொடி கிராமத்தில் விடுமுறையில் வந்த கடற்படை வீரரொரு வருக்கு கொரோனா தொற்று இருப்பது அண்மையில் அடையாளங் காணப்பட்ட நிலையில் அவர்களது உறவினர்கள் வீடு களிலும் தனிமைப்படுத்தல் நிலையங்களி லும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் தனிமைப்படுத்தப்பட்ட கடற்படை வீரரின் உறவினர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என பரி சோதனை முடிவுகள் கிடைக்கப் பெற்ற நிலையில் அவர்களது மகாகச்சக்கொடியில் தனிமைப்படுத்தப்பட்ட வீடுகள் நேற்று தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிப்பு செய் யப்பட்டது.

நேற்று மதியம் இச் செயற்பாட்டை பொது சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழு மேற் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-3,299)

புத்தகங்களை மரியாதையுடன் போற்றும் வீடுகளில் தான் நன்னெறி நல்லொழுக்கம் மற்றும் கடின உழைப்பாளர்கள் வளர்வார்கள். – சுகோம் விக்கி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தீவகத்தின் பெரும் சொத்து சபாரட்ணம் மாஸ்ரர்

மெய்யியல், வரலாறு, சைவ சித்தாந்தம் என்பவற்றில் புலமைமிக்க பேராசான் ஆ.சபாரட்ணம் அவர்கள் நேற்று முன்தினம் காலமானார் என்ற செய்தி தமிழ் அன்னையை துயரமடையச் செய்துள்ளது.

சபாரட்ணம் மாஸ்ரர் மிகப் பெரும் அறிஞர். பண்பாட்டு செழுமையின் பற்றாளர். எவர் மீதும் அன்பு காட்டுகின்ற கனவான்.

அவரின் அறிவாற்றல் பலரையும் அவர் பால் ஈர்த்தது.

தனது அறிவுப் புலத்தை பல்கலைக்கழக சமூகத்துக்கு வழங்கி அதனூடு கற்றறிந்த சமூகம் உருவாக உழைத்த பெருந்தகை.

இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து எதனையும் அறிவார்ந்த நோக்கில் பார்க்கின்ற பக்குவம் அவரிடம் மிகுந்திருந்தது.

இதன் காரணமாக சபாரட்ணம் மாஸ்ரர் என்றால் அவர் இல்லாதவிடத்தும் அவரை அறிந்தவர் மனத்தால் எழுந்து மதிப்புச் செலுத்துவர்.

அந்தளவுக்கு அவரின் நெகிழ்ந்த மனம் அனைவரையும் ஆட்கொண்டிருந்தது.

மெய்யியல், வரலாறு, சைவ சித்தாந்தம் என்பவற்றோடு ஆங்கிலத்திலும் புலமைமிக்க சபாரட்ணம் மாஸ்ரர் அவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் ஆய்வுப் பணிகளுக்குப் பேருதவி புரிந்தவர்.

பட்டப்படிப்பு மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எனப் பரந்துபட்ட ஒரு சமூகம் இவரை நாடி நின்ற போது, அவர்களுக்கெல்லாம் உதவுவதையே தனது முதற்பணியாகக் கருதினார்.

மௌனமுனி கைலாசபதி அவர்களின் தத்துவக் கருத்துக்களில் மிகுந்த ஈடுபாடு கொண்ட சபாரட்ணம் மாஸ்ரர் மௌனமுனி கைலாசபதியின் சிந்தனைகளை நூலுருப் பெறச் செய்ததுடன், தான் எழுதிய கட்டுரைகளில் கைலாசபதியின் சிந்தனைகளை மேற்கோள் காட்டவும் தவறவில்லை.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு வெளியிட்டு வருகின்ற நல்லைக்குமரன் மலரில் சபாரட்ணம் மாஸ்ரர் எழுதிய கட்டுரைகள் பெறுமதிமிக்கவை என்பதோடு அவரின் கட்டுரைகள் நல்லைக்குமரன் மலருக்குச் சிறப்புச் செய்தன என்பதையும் இங்கு பதிவு செய்வது பொருத்தமானது.

தீவகத்தில் நாரந்தனை மண்ணைச் சொந்த இடமாகக் கொண்ட சபாரட்ணம் மாஸ்ரர் கரம்பொன் சண்முகானந்த வித்தியாலயத்தில் அதிபராக நீண்ட காலம் கடமையாற்றியிருந்தார்.

சுவீடன் உப்சலாப் பல்கலைக்கழகத்தில் சிறப்பு ஆய்வாளராக இருந்தமை அவரின் தகைமைக்குத் தக்க சான்றாகும்.

எவரையும் குறைகூறாமல் நல்லதையே சிந்தித்து, என்றும் பணி செய்வது எங்கடன் என்று அறவாழ்வு வாழ்ந்த சபாரட்ணம் மாஸ்ரரின் மறைவால் தீவகம் தனது பெருஞ் சொத்தை இழந்துள்ளது.

# சிவபூமி பாடசாலை முதலிடம் பெற்றுள்ளமை புதிய நம்பிக்கையைத் தரும் வெற்றிச்செய்தி

## கலாநிதி ஆறு. திருமுருகன் பெருமிதம்



(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை கடந்த 2003 ஆம் ஆண்டு இறையருளால் ஆரம்பிகக்கப்பட்டு வெற்றிகரமாகத் தனது பணிகளைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

17 ஆண்டுகளுக்கு முன்னர் கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையை ஆரம்பிக்கின்ற போது கடவுள் நம்பிக்கையுடன் தான் ஆரம்பித்தோம். தற்போது அகில இலங்கை ரீதியிலுள்ள மாற்று வலுவுள்ள நிறுவனங்களில் எங்கள் பாடசாலை முதலாவது இடத்தைப் பெற்று வெற்றிவாகை சூடியிருப்பது பெருமகிழ்ச்சியைத் தருகிறது. அதுவும் கொரோனா நோய்ச்சூழலில் எல்லோரும் மனம் குழம்பிய நிலையில் இத்தகைய வெற்றிச் செய்தி எங்களுக்குப் புதிய நம்பிக்கையைத் தருகிறது என சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை இலங்கை சமூக சேவைகள் திணைக்களத்தால் தேசிய ரீதியில் மாற்று வலுவுள்ள நிறுவனங்கள் மத்தியில் நடத்தப்பட்ட சுய அபிமானி - 2019 திட்ட ஆய்வில் முதலிடம் பெற்று விருதுக்குத் தெரிவா கியுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறுகூறினார். (இ-18)

# அரசியல் பித்தலாட்டங்களுக்கு துணைபோகப் போவதில்லை!

## மகிந்தவின் கூட்டத்தை புறக்கணித்த சஜித் அணி



(கொழும்பு)

அரசாங்கத்தின் அரசியல் பித்தலாட்டங்களுக்கு துணைப்போகப் போவதில்லை. கடந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நாளை திங்கட்கிழமை கூட்டமொன்றுக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருக்கும் நிலையில், அதனைத் தாம் புறக்கணிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

இது குறித்து அதன் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில்:-

தற்போதைய சூழ்நிலையில் இத்தகையதொரு கூட்டத்தில் கலந்துகொள்ளும் எண்ணம் எமக்கு இல்லை என்பதுடன் முன்னாள் சபாநாயகரின் தலைமையில் பாராளுமன்றத்தைக் கூட்டுவதொன்றே இப்போது நடைமுறைச் சாத்தியமான செயலாக அமையும்என்பதையும் நாம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

மீண்டும் பழைய பாராளுமன்றத்தைக் கூட்டுவதில்லை என்பதில் ஜனாதிபதியும் அரசாங்கமும் உறுதியாக இருக்கும் அதேவேளை தமக்குச் சார்பான ஊடகங்களைப் பயன்படுத்தி அதற்கான பிரசாரங்களையும் முன்னெடுத்துச் செல்கின்றனர்.

அவ்வாறிருக்கையில் தற்போது அதே பழைய பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருடன் கூட்டமொன்றுக்கு அழைப்புவிடும் அரசின் இரட்டை வேடம் விசனமளிக்கிறது.

நாட்டில் கொவிட் - 19 கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்ததிலிருந்து நாம் ஒரு பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியாகவே செயற்பட்டு வருகின்றோம்.

ஜனவரி 24 ஆம் திகதி மற்றும் பெப்ரவரி 25 ஆம் திகதி பாராளுமன்ற அமர்வுகளின் போதும் நாம் இது பற்றி சுட்டிக்காட்டினோம். எனினும் அப்போதும் அரசாங்கம் அசமந்தமாகவே செயற்பட்டுக்கொண்டிருந்தது.

நிலைமை மோசமடையத் தொடங்கிய பின்னர் கட்சித்தலைவர்களை ஒன்றிணைத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் நாம் கலந்துகொண்டிருந்தோம்.

அதுமாத்திரமன்றி மிகவும் பொறுப்பு வாய்ந்த எதிரணியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கல், நிவாரணம் வழங்கலை அரசியல் மயப்படுத்துவதிலிருந்து தவிர்த்தல், பி.சி.ஆர் பரிசோதனைகளை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளையும் அரசாங்கத்திற்கு வழங்கினோம். எனினும் அந்த யோசனைகளை அரசாங்கம் கவனத்திலெடுக்காமை குறித்து கவலையடைகின்றோம்.

அத்தோடு தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிநிலையில் எவ்வித அரசியல், கட்சிபேதங்களுமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென வலியுறுத்தி நாம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்திருந்த கடிதத்திற்கு எவ்வித துலங்கலும் காண்பிக்கப்படாத நிலையிலேயே, பிரதமர் தலைமையில் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

தற்போதைய சூழ்நிலையில் இத்தகைய தொரு கூட்டத்தில் கலந்துகொள்ளும் எண்ணம் எமக்கு இல்லை என்பதுடன் முன்னாள் சபாநாயகரின் தலைமையில் பாராளுமன்றத்தைக் கூட்டுவதொன்றே இப்போது நடைமுறைச் சாத்தியமான செயலாக அமையும் என்பதையும் நாம் வலியுறுத்த விரும்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# கொரோனா எதிரொலி; முகாம்களிலிருந்து 4 இலட்சம் அகதிகள் வெளியேறத் தடை

(நைரோபி)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக முகாம்களிலுள்ள 4 இலட்சத்து 7 ஆயிரம் அகதிகளும் தங்களது வசிப்பிடத்திலிருந்து வெளியேறக் கூடாது என்று கென்ய உள்துறை அமைச்சர் உத்தரவிட்டார்.

ஆபிரிக்க நாடான கென்யாவில் சோமாலியா, தெற்கு சூடான் எதியோப்பியா ஆகிய நாடுகளிலிருந்து கடந்த 20 ஆண்டுகளில் வந்த 4 இலட்சத்துக்கும் மேற்பட்ட அகதிகள் இரண்டு பெரிய முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

இதில், கிழக்கு கென்யாவிலுள்ள தாதாப் முகாமில் 2 இலட்சத்து 17 ஆயிரம் பேரும் வட மேற்கு கென்யாவிலுள்ள காகுமா முகாமில் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் அகதிகளும் உள்ளனர்.

இந்நிலையில் கென்யா நாட்டில் கொரோனா தொற்று மெல்ல மெல்ல பரவி வருகிறது. இதுவரை 390 இற்கும் மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். எனினும் அகதிகள் உள்ள இரு முகாம்களிலும் இதுவரை யாருக்கும் கொரோனா தொற்று ஏற்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா பாதிப்பு ஏற்பட்டால் இரண்டாயிரம் அகதிகளை மட்டுமே தனிமைப்படுத்தி வைக்க முடியும். 110 பேருக்கு மட்டுமே அவசர சிகிச்சைப் பிரிவுகளில் படுக்கை வசதிகள் உள்ளன.

இதனால் இந்த முகாம்களிலுள்ள 4 இலட்சத்து 7 ஆயிரம் அகதிகளும் தங்களது வசிப்பிடத்திலிருந்து வெளியேறக் கூடாது என்று கென்ய உள்துறை அமைச்சர் பிரெட் மடியாங்கி உத்தரவிட்டார்.

கென்யாவில் கடந்த 22 ஆம் திகதி முதல் 3 வாரங்களுக்குப் பகுதி நேர ஊரடங்கு உத்தரவு அமுலிலிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# நெடுங்கேணியில் மழை பயிர்ச் செய்கை பாதிப்பு

(வவுனியா)

நெடுங்கேணி ஒலுமடு கிராம உத்தியோகத்தர் பிரிவில் நீண்டகாலமாக வரட்சி நிலவப்பட்ட போதிலும் நேற்று முன்தினம் காற்றுடன் கூடிய மழை பெய்ததினால் வான்பயிரும், விவசாயசெய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

கீரிசுட்டான் கிராமத்தில் காற்று மழையினால் பாரிய மரம் விழுந்ததால் வீட்டின் ஒருபகுதி உடைந்து சேதமடைந்து மின்சாரமும் தடைப்பட்டுள்ளது.

அதே நேரம் வாழை முருங்கை, பலா போன்ற பயிர்களும் புகையிலை கத்தரி பயித்தை போன்ற விவசாய செய்கையும் கடும் மழையினால் சேதம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# மரக்கறி, பழவகை வியாபாரம் குறித்து கமநலத் திணைக்களத்தின் அறிவிப்பு

(வவுனியா)

வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் ஊரடங்கு நேரத்தில் உள்ளூர் மற்றும் வெளியூர்களுக்கான மரக்கறி மற்றும்பழவகைகளின் மொத்த மற்றும் சில்லறை கொள்வனவு, விற்பனை, சந்தைபடுத்தல் தொடர்பான அறிவித்தல்கள் விடுக்கபட்டுள்ளன.

வவுனியாவில் ஊரடங்கு நேரத்தில் பொதுமக்கள் மரக்கறிகளை வீடுகளில் இருந்தபடியே கொள்வனவு செய்யக்கூடிய வகையில் உள்ளூர்களில் வீடுகளுக்கு நேரடியாக மரக்கறி வியாபாரம் மேற்கொள்ளுவதற்காக வியாபாரிகள் ஒழுங்குபடுத்தபட்டுள்ளனர்.

அதேபோன்று விவசாயிகளிடம் இருந்து பிற மாவட்டங்களுக்கு மரக்கறி பழவகைகளை கொள்வனவு செய்து கொண்டு செல்வதற்கான வசதிகளும் ஏற்படுத்தபட்டுள்ளன. பிற மாவட்டங்களுக்கு பொருட்களை சந்தைபடுத்த விரும்பும் விவசாயிகளின் நலன்கருதி பொருட்கள் சந்தைபடுத்தும் இடங்கள் மற்றும் வெளிமாவட்டங்களுக்கு அனுமதிக்கபட்ட வாகனங்கள் தொடர்பான விபரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று வெளிமாவட்டங்களுக்கு பப்பாசி பழங்களை கொண்டு செல்வதற்கும் வசதிகள் ஏற்படுத்தபட்டுள்ளன. ரெட்லேடி பப்பாசி பழத்த்திற்கான ஆகக்குறைந்த கொள்வனவு விலை கிலோ ரூபாய் 20 ஆகும். கிலோ ரூபாய் 20 க்கு குறைந்த விலையில் கொள்வனவு செய்யும் வியாபாரிகள் தொடர்பான முறைபாடுகள் கிடைக்குமிடத்து ஊரங்கு நேர போக்குவரத்து அனுமதி செல்லுபடியற்றதாக்கப்படும்.

மேலும் வீடுகளுக்கு நேரடியாக பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் கூடிய விலைகளில் விற்பனை செய்வது தொடர்பாக கிடைக்கபெறும் முறைப்பாடுகளின் அடிப்படையில் ஊரடங்கு நேர வியாபார அனுமதி செல்லுபடியற்றதாக்கப்படும். மேலும் இது தொடர்பிலான முறைபாடுகளுக்கு 024-2225511 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# சிகையலங்கரிப்பு நிலையங்களைத் திறக்க மன்னார் அரசாங்க அதிபரிடம் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் பிரதேச சிகையலங்கரிப்பு நிலையங்களை மீண்டும் திறக்க அனுமதி கோரி மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ. மோகன்றாஸிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கோரிக்கை அடங்கிய மகஜர் நேற்று மன்னார் பிரதேச சிகையலங்கார தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் என்.எஸ். றெஜி, செயலாளர் சகாயநாதன் ராஜா ஆகியோர் கையெழுத்திட்டு குறித்த மகஜரை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

குறித்த மகஜரில் மேலும் குறிப்பிடுகையில் தொற்று நோய் பரவலை தடுப்பதற்காக அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் செயற்பாடுகளின் ஒன்றான சிகை அலங்கரிப்பு நிலையங்களை மூடுகின்ற செயற்பாட்டினால் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள் அவர்களை நம்பி வாழ்கின்ற குடும்பத்தினரும்பல்வேறு வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக மிகவும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளோம். அரசின் தற்போதைய அறிவிப்பால் மிகவும் இக்கட்டான சூழ்நிலைக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம். சிகைஅலங்கரிப்பு நிலையங்கள் மூடப்பட்டிருந்த நிலையில் சிறுவர்கள், முதியவர்கள், அலுவலகப் பணியாளர்கள் என பல்வேறு நிலையில் உள்ளோரும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே மேற்படி விடயங்களைக் கருத்தில் கொண்டு இந்த நிலையை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தனர். (இ-4-285)

# சேமக்காலையிலுள்ள நினைவுச் சின்னங்கள் விசமிகளால் உடைப்பு





(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபைக்குட்பட்ட நவாலி பகுதியில் அமைந்துள்ள நவாலி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபைக்குச் சொந்தமான சேமக்காலையிலுள்ள நினைவுக் கட்டங்கள்(சின்னங்கள்) விசமிகளால் சேதமாக்கப்பட்டன.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகி ன்றது.

இச்சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-4)

## (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை...2028

**சுஜீ**


அப்பொது வெளியில் அசுத்த காற்று நாம் மாஸ்க் அணியவில்லை



இப்போது வெளியே தூய காற்று நாம் மாஸ்க் அணிந்து உலாவுகிறோம்

**செல்வன்**

உன்னை செக் செய்த பிறகு தான் பால் கறக்க விடுவேன்



**மதுஷா**

படிக்கிற வயசில ஒழுங்கா படிச்சிருந்தா இப்போ அமெரிக்கா , பிரான்ஸ் , இத்தாலி னு எங்கயாவது போய் மாட்டிருப்பம்



நல்ல வேளை படிக்கல

**அஜின்**

காதலும் கொரோனாவும் ஒன்று தான்



இரண்டில் எது வந்தாலும் இறுதியில் நீ தனிமைப்படுத்தப்படுவாய்

**அபினயா**

பொழைச்சா வைரம் பாஞ்ச கட்டை பொழைக்காட்டி வைரஸ் பாஞ்ச கட்டை



அவ்வளவு தான் வாழ்க்கை

**இர்பான்**



வீட்ல வெட்டியா இருந்தா இப்பிடித் தான் யோசிக்க தோனும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# 65 ஆயிரத்தைக் கடந்த பலி எண்ணிக்கை வல்லரசை வாட்டிவதைக்கிறது வைரஸ்!




(நியூயோர்க்)
அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் ஆயிரத்து 897 பேர் உயிரிழந்தனர். இதனால் அந்நாட்டில் வைரஸுக்கு பலியானோர் எண்ணிக்கை 65 ஆயிரத்தைக் கடந்தது.

உலகம் முழுவதும் 34 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் பரவியது. வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் 20 இலட்சத்து 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிகிச்சை பெறுபவர்களில் 51 ஆயிரத்து 352 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் 10 இலட்சத்து 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்குப்பின் குணமடைந்தனர். ஆனாலும், இந்தக் கொடிய வைரஸுக்கு உலகம்முழு வதும் இதுவரை 2 இலட்சத்து 39 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த டிசெம்பர் மாதம் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா, ஐரோப்பிய மற்றும் அமெரிக்காவைப் புரட்டியெடுத்து வருகிறது. உலகளவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பலி எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்திலுள்ளது.

இந்நிலையில், நேற்று முற்பகல் 11 மணி நிலவரப்படி அமெரிக்காவில் 11 இலட்சத்து 31 ஆயிரத்து 30 பேருக்கு கொரோனா பரவியது. குறிப்பாக நேற்று முன்தினம் ஒரே நாளில் 36 ஆயிரத்து 7 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும், அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன் தினம் ஒரே நாளில் மட்டும் ஆயிரத்து 897 பேர் உயிரிழந்தனர். இதனால் அமெரிக்காவில் கொரோனாவுக்குப் பலியானோர் எண்ணிக்கை 65 ஆயிரத்து 753 ஆக அதிகரித்தது. (இ)

## கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட அமெரிக்க மக்கள்

(வோஷிங்டன்)
தனி மனித சுதந்திரம், சட்ட உரிமைகள், மேம்பட்ட சுகாதாரம் என்றே வாழ்ந்து பழகிவிட்ட அமெரிக்க மக்கள் தங்கள் சுயபாதுகாப்பிற்காக இனி நீண்ட காலத்துக்கு சமூக இடைவெளியைப் பின்பற்றி நடப்பது, முகக் கவசம் அணிந்து நடமாடுவது போன்ற நெருக்கடியான சூழலுக்குத் தள்ளப்பட்டனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி அமெரிக்காவின் வர்த்தகத் தலைநகரான நியூயோர்க்கில் 110 மாடி இரட்டைக் கோபுரக் கட்டடத்தை அல்கொய்தா பயங்கரவாதிகள் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தி மூவாயிரத்துக்கும் மேற்பட்டோரை கொன்று குவித்தனர்.

இந்தக் காட்சிகளை அப்போது தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பில் பார்த்த அமெரிக்க மக்களில் பலர் அதன் தாக்கத்திலிருந்து மனதளவில் இன்னும் முழுமையாக மீளவில்லை. இது செயற்கையான ஒன்று என்றாலும் கூட இந்தத் தாக்குதலை நடத்த உத்தரவிட்ட அல்கொய்தா தலைவன் பின்லேடனை 10 ஆண்டுகளுக்குப் பிறகு பாகிஸ்தானில் கொன்று, தான் பட்ட காயத்துக்கு அமெரிக்கா மருந்து தடவிக் கொண்டது.

2008-2009 இல் ஏற்பட்ட உலகளாவிய நிதி நெருக்கடி காரணமாக அமெரிக்க பொருளாதாரம் பெரும் சரிவு கண்ட போதும் 2 ஆண்டுகளில் எழுச்சி பெற்று விட்டது. அப்போதும் கூட மக்கள் மனம் தளர்ந்து விடவில்லை.

2009-2010 இல் அமெரிக்காவை சூறாவளியாகத் தாக்கிய 'ஸ்வைன் ப்ளூ' என்னும் பன்றிக் காய்ச்சல் நோய்க்கு சுமார் 13 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். அப்போதும் கூட அமெரிக்கா



ஆட்டம் காணவில்லை. அசரவில்லை. அதன் பொருளாதாரமும் பெரும் சரிவைக் காணவில்லை. தன்னிடமிருந்த தடுப்பு மருந்துகள், நவீன மருத்துவ முறைகளால் பன்றிக்காய்ச்சலை தவிடு பொடியாக்கியது.

ஆனால், இப்போது சீனாவில் தோன்றிய கொரோனா வைரஸை கட்டுப்படுத்த முடியாமல் பரிதவித்து வரும் அமெரிக்கா 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தனது மக்களை இழந்துவிட்டது. இந்த வைரஸின் தாக்குதலுக்கு 11 இலட்சத்து 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அமெரிக்கர்கள் பாதிக்கப்பட்டனர்.

தொழிற்சாலைகள்,வர்த்தகம், போக்குவரத்து இயக்கம் அடியோடு முடங்கியதால் அமெரிக்கப் பொருளாதாரம் 12 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது கடும் வீழ்ச்சி கண்டுள்ளது.

இந்நிலையில் தனி மனித சுதந்திரம், சட்ட உரிமைகள், மேம்பட்ட சுகாதாரம் என்றே வாழ்ந்து பழகிவிட்ட அமெரிக்க மக்கள் தங்கள் சுய பாதுகாப்பிற்காக இனி நீண்ட காலத்துக்கு சமூக இடைவெளியைப் பின்பற்றி நடப்பது, முகக் கவசம் அணிந்து நடமாடுவது போன்ற நெருக்கடியான சூழலுக்கு தள்ளப்பட்டனர்.

"இதன் தாக்கம் இளைஞர்கள், சிறார்கள், குழந்தைகள் மன நலத்திலும் பெரும் பாதிப்பை ஏற் படுத்தும்" என அமெரிக்க மனநல மருத்துவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதேபோன்று சுகாதாரத்துறை வல்லுநர்கள், "இவர்கள் மன ரீதியாக இதுபோன்ற நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு இன்னும் சிலகாலம் பிடிக்கலாம்" எனத் தெரிவித்தனர்.

ஏனென்றால், மருத்துவமனைகளில் நோயாளிகள் மட்டுமே முகக் கவசம் அணிந்து காணப்படும் ஆசிய, ஆபிரிக்க நாட்டு மக்கள் கூட இப்போது, இன்னும் பல ஆண்டுகள் பொது ,டங்களில் கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டிய நிலைமை உருவாகிவிட்டது.

"இத்தகைய சூழலில் அமெரிக்கர்கள் தங்களுக்குப் பிடித்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி இன்னும் பல ஆண்டுகளுக்கு முகக் கவசம் அணிய வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுவார்கள்" என்பது அமெரிக்க மனநல மற்றும் சுகாதாரத்துறை நிபுணர்களின் கருத்தாகும். (இ)

## சீனா மீது புதிய வரிகள்! அமெரிக்கா அதிரடி முடிவு

(வோஷிங்டன்)
கொரோனா வைரஸ் தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்புக்கு சீனா மீது புதிய வரிகள் விதிக்கும் திட்டத்தை அமெரிக்கா கையில் எடுத்தது.

சீனாவில் தோன்றிய கொரோனா வைரஸ், அமெரிக்காவில் பலத்த பாதிப்பை ஏற்படுத்தியது. அங்கு 11 இலட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு இந்த வைரஸ் பாதிப்புள்ளது. 65 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவால் அமெரிக்கப் பொருளாதாரம் சீர்குலைந்தது.

இந்நிலையில் வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ட்ரம்ப் ஊடகவியலாளர்களிடம் பேசினார். அப்போது அவரிடம் ஒரு ஊடகவியலாளர், "கொரோனா வைரஸுக்கு தண்டனையாக அமெரிக்கா தனது கடன் கடமைகளை சீனாவுக்கு செலுத்தக்கூடாது என்று கருதுகிறதா?" எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ட்ரம்ப் பதிலளிக்கையில், "கடன் இரத்து என்பது ஒரு கடினமான விளையாட்டு. இது அமெரிக்காவின் புனிதத் தன்மைக்கு கேடு விளைவிப்பதாக அமைந்து விடும். நாம் அவர்களுக்கு வரி விதிப்பதன் மூலம் இழப்பை சரி செய்யலாம். அதைத் தாண்டி வேறு வழிகளிலும் கூட செய்ய முடியும். அமெரிக்கா கடமைகளை இரத்துச் செய்வது என்பது கடினமான விளையாட்டு" எனப் பதிலளித்தார்.

இது சீனா மீது அமெரிக்கா புதிய வரி விதிக்கும் முடிவை காட்டுவதாக அமைந்தது.

அமெரிக்காவின் கூட்டாளிகளான ஜேர்மனி, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் கொரோனா வைரஸால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு சீனாவிடம் இழப்பீடு கோரும் வழிகள் குறித்து ஆராயப்படுவது



பற்றியும் ட்ரம்பிடம் கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கு அவர், "நான் அதை வித்தியாசமாகச் செய்வேன். அதை விட கூடுதலாக பணத்தை வரி விதிப்பின்மூலம் செய்யலாம். ஒரு இலட்சம் கோடி டொலர் அளவில் அதை செய்ய முடியும். ஆனால் அதை நாம் இன்னும் கொஞ்சம் நேர்மையான முறையில் செய்யலாம். கடன் இரத்து என்பது கடினம்.

நம்மைப் பாதுகாக்க டொலர் உள்ளது. அதுதான் உலகிலேயே மிகப்பெரிய பணம். அது வலுவடைந்துள்ளது. நம்மிடம் வலுவான டொலர் இருக்கிறது" என ட்ரம்ப் பதிலளித்தார். (இ)

## சுரங்கம் தோண்டி தப்பிக்க முயன்ற கைதிகள்

### கொலம்பியாவில் பரபரப்பு சம்பவம்

(போகோடா)
கொரோனா வைரஸ் தொற்று அச்சத்தைப் பயன்படுத்தி சிறையில் சுரங்கம் தோண்டி தப்பிக்க கைதிகள் முயற்சி செய்த சம்பவம் கொலம்பியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் கொரோனா பாதிப்பு அதிகமாக உள்ளது. குறிப்பாக அந்த நாட்டிலுள்ள சிறைகளில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது.

அந்த வகையில் கொலம்பியாவின் மெல்டா பிராந்தியத்தில் வில்வாய் சென்சியோ நகரிலுள்ள சிறையில் காவலர்கள் உட்பட 314 பேருக்குக் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்கள் அனைவரும் சிறையிலேயே தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால் சிறையில் பாதுகாப்பற்ற சூழல் நிலவி வருகிறது.

இதனைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட கைதிகள் சிலர் சிறையிலிருந்து தப்பிக்க திட்டம் தீட்டினர். அதன்படி உள்ளூர் சண்டைகளில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களைக் கொண்டு 7 கைதிகள் தங்கள் சிறை அறையில் சுரங்கம் தோண்ட முயற்சித்தனர். ஆனால் இது குறித்து முன்னரே சிறைக்காவலர் களுக்கு தகவல் கிடைத்ததால் அவர்கள் கைதிகளின் சதித்திட்டத்தை தடுத்து நிறுத்தினர்.

இந்தச் சம்பவம் கொலம்பியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. (இ)

# நாட்டில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலான நிலையில் தேர்தலை காலவரையறையின்றிப் பிற்போடுங்கள்

## தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு ஆனந்தசங்கரி கடிதம்



(யாழ்ப்பாணம்)
நாட்டில் நீடிக்கும் அச்சுறுத்தலான நிலையில் தேர்தலை காலவரையறையின்றிப் பிற்போடுங்கள் என தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கடிதம் ஒன்றின் ஊடாக வலியுறுத்தினார். குறித்த கடிதத்தில்:-

மே 2 ஆம் திகதி நடை பெற்ற தேர்தல்கள் ஆணைக் குழு சந்திப்பிற்கு எனக்கு அழைப்பு விடுத்தமைக்கு நன்றி கூறுகின்றேன். ஆனால் நாட்டில் ஏற்பட்டுள்ள பயங்கர சூழ்நிலை காரணமாக குறித்த கூட்டத்தில் கலந்து கொள்ளாமைக்கு வருந்துகிறேன்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளே கொரோனா அச்சுறுத்தலுக்கு அஞ்சி நிலை தடுமாறி நிற்கின்ற நிலையில் சிறிய நாட்டில் உள்ள நாம் இதை சாதாரண விடயமாகத் தட்டிக் கழிக்க நினைக்க முடியாது.

எதிர்காலம் எப்படி அமையுமோ என்ற பீதிக்குள் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்த நாட்டின் மூத்த பிரஜைகளில் ஒருவராகிய என்னுடைய கோரிக்கைக்கமைய நிலைமை சீரடையும் வரை நடைபெறவிருக்கின்ற தேர்தலை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றேன்.

குறித்த கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டியதாகும். எமக்கு இது புதிய விடயமல்ல. இந்த நாட்டில் ஜனநாயகம் என்றோ புதைக்கப்பட்டுவிட்டது.

6 ஆண்டு கால ஆட்சிக்கு உரிமை பெற்றவர்கள் நீண்ட காலம் ஆட்சியமைத்ததும். பலாத்காரம் மூலம் பதவிக்கு வந்தவர்கள் ஆட்சி நடத்தியதும் உலகறிந்ததே. அத்துடன் அரசால் தடைசெய்யப்பட்ட கட்சியினர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதும் உலகறிந்த உண்மை. இந்த நிலையில் தேர்தலை பிற்போடுவது பாரதுரமான குற்றமல்ல. நாம் கடந்தகாலத்தை மீட்டுப்பார்க்க விரும்பவில்லை. இப்பிரச்சினையில் அக்கறை கொண்ட அனை வரும் சுயநல நோக்குடன் நோக்காது நாட்டின் நன்மை கருதி நிலமை சீரடையும் வரை தேர் தலை பிற்போட்டு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## வவுனியாவில் பெருந்தொகை கோடாவுடன் இளைஞன் கைது

(வவுனியா)
வவுனியா செட்டிகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இளைஞரொருவரை கசிப்பு உற்பத்திக்கான பொருட்களுடன் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை செட்டிகுளம் பெரியகுளம் 10 ஆம் கட்டை பகுதியில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கையில் சிலர் ஈடுபடுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் பிரதம பொலிஸ் பரிசோதகர் பிரதீப் குமார் தலைமையிலான பொலிஸ் குழு சோதனையில் ஈடுபட்டபோதே குறித்த பொருட்களைக்கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 54 ஆயிரம் மில்லிலீற்றர் கோடாவும் 3 போத்தல் கசிப்பு மற்றும் பரல்களுடன் வீரபுரத்தை சேர்ந்த 24 வயது இளைஞனை கைது செய்ததாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் தொடர்ந்தும் செட்டிகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியை பொலிஸார் முறியடித்து வருவதாகவும் தெரிவித்தனர். (இ)

## வவுனியா கடற்படை உத்தியோகத்தரின் குடும்பத்தினருக்கு கொரோனா இல்லை

(வவுனியா)
வவுனியா மகாகச்சகொடி பகுதியைச் சேர்ந்த கடற்படை உத்தியோகத்தரின் குடும்பத்தினரான எட்டுப் பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என வவுனியா பிரதிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மகேந்திரன் தெரிவித்தார்.

வெலிசர கடற்படை முகாமில் கடமையாற்றும் வவுனியாவைச் சேர்ந்த கடற்படை உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றிருப்பது பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியா மகாகச்ச கொடியைச் சேர்ந்த குறித்த கடற்படை உத்தியோகத்தரின்குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியவர்கள் என 9 பேர் பம்பைமடு இராணுவ முகாமில் தனிமைப் படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து குறித்த 9 பேருக்குமான பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கான மாதிரிகள் சேர்க்கும் பணி நேற்று முன் தினம் இடம்பெற்றது. அதற்கான முடிவுகள் நேற்று முன்தினம் வெளிவந்தது.

அதனடிப்படையில் கடற்படை உத்தியோகத்தரின் குடும்ப உறவினர்களான 8 பேருக்கும் கொரோனா தொற்று இல்லை என்று பரிசோதனைகளின் மூலம் தெரியவந்ததாகவும் ஒருவரின் முடிவு இன்னும் கிடைக்கப் பெறவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-299)


# 31ம் நாள் நினைவஞ்சலி

## அமரர். திருமதி.தங்கராஜன் சுககன்னியா



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராஜன் சுககன்னியா அவர்கள் கடந்த 06.04.2020 அன்று காலமானார்.அன்னாரின் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. அன்னார் பொன்னையா தங்கராஜன் (ஓய்வு பெற்ற பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், அநுகரன் (பொறியியலாளர்- ஜேர்மன்), சுபாகரன் (பொறியியலாளர்- அவுஸ்திரேலியா), கிருபா (தொழில் திணைக்களம்- திருகோணமலை), கருணா (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், யாகு (ஜேர்மன்), சுதாயினி (அவுஸ்திரேலியா), சிவபாலன் (புள்ளிவிபரவியல் திணைக்களம்- திருகோணமலை), யூதா (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். துஜன்,துஷானா (ஜேர்மன்), பவின், சஜின் (அவுஸ்திரேலியா), கேருஷன், சாருஜன் (விவேகானந்தா கல்லூரி- திருகோணமலை), ருக்ஷன் (திருகோணமலை), அனுப்பிரியா, அனுராகவன் (மட்டக்களப்பு) ஆகியோரின் பாட்டியும் ஆவார். அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி 06.05.2020 யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது என்பதனை தங்களுக்கு அறியத் தருவதுடன் தொலைபேசி மூலம் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அயலவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிறப்பு 06.04.1950

இறப்பு 06.04.2020

(சி-9551)

54, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை

தகவல்:- கணவர் பொ.தங்கராஜன் - 077 626 8667
மகன்மார் த.அநுகரன்-00491753258008, த.சுபாகரன் - 0061412373056
மகள்மார் - எஸ்.கிருபா- 077 666 8667, யூ-கருணா-0772559725

# சீனாவில் மீண்டும் அச்சம் அறிகுறிகளே இல்லாமல் 980 பேருக்கு கொரோனா

(பீஜிங்)

சீனாவில் அறிகுறிகளே இல்லாமல் 980 இற்கும் மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் பாதித்துள்ளதால், மக்களிடம் அச்சம் ஏற்பட்டது. இதேவேளை 5 நாட்கள் மே தின விடுமுறை என்பதால் தீவிர கண்காணிப்பு முடுக்கி விடப்பட்டது.

சீனாவின் வுஹான் நகரில் தோன்றிய கொரோனா வைரஸ், அந்த நாடு முழுவதும் பரவி, உலகமெங்கும் அச்சுறுத்தி வருகிறது.

சீனாவைப் பொறுத்தமட்டில் அது கட்டுப்படுத்தப்பட்டு, இப்போது இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ளது. வுஹான் நகரில்கூட மக்கள் முன்புபோலவே வாழத்தொடங்கி விட்டனர்.

இந்நிலையில் அறிகுறிகளே இல்லாமல் அங்கு கொரோனா மீண்டும் பரவத்தொடங்கி யிருப்பது மக்கள் மத்தியில் அச்சத்தை அதிகரித்தது.

காய்ச்சல், இருமல், சளி, தொண்டை வலி உள்ளிட்ட எந்த அறிகுறிகளும் இல்லாமல் அங்கு 980 இற்கும் மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் தாக்கியது. அதிலும் வுஹான் நகரிலும், அது அமைந்துள்ள ஹுபேய் மாகாணத்திலும் மட்டுமே 631 பேருக்கு கொரோனா பாதித்தது.

ஒரே நாளில் 25 பேருக்கு அறிகுறிகள் இன்றி கொரோனா வைரஸ் தாக்கி யிருப்பதாக சீன சுகாதார ஆணையகம் நேற்று முன்தினம் தெரிவித்தது. இதன் மூலம் அறிகுறிகள் இன்றி கொரோனா வைரஸ் தாக்கியோரின் எண்ணிக்கை 981 ஆக உயர்ந்தது. 115 பேர் வெளிநாட்டுப் பயண தொடர்பில் இருந்தவர்கள் ஆவர். இவர்கள் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டனர்.

வுஹானில் தொடர்ந்து 27 நாட்களாக யாருக்கும் கொரோனா வைரஸ் தாக்காமல் இருந்து வந்து. இந்நிலையில் இப்போது அறிகுறிகள் இல்லாமல் அங்கு கொரோனா தாக்கி வருவது அரசுக்கு பெருத்த தலைவலியாக அமைந்துள்ளது.

கடந்த 30 ஆம் திகதி ஹுபேய் மாகாணத்தில் மட்டுமே கொரோனா நோயாளிகளுடன் தொடர்பில் இருந்த 2 இலட்சத்து 82 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கண்டறியப்பட்டு, மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் தொழிலாளர் தினக் கொண்டாட்டங்களுக்காக சீனாவில் நேற்று முன்தினம் முதல் தொடர்ந்து 5 நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டது.

பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட நிலையில் ஆயிரக்கணக்கானோர் அங்கு வருவார்கள் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. இதனால் அதிகாரிகள் தீவிர கண்காணிப்புப் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுபற்றி அரசு தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், "கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பு எல்லா மட்டங்களிலும் இருக்க வேண்டும். போக்குவரத்து சாதனங்கள், ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களில் கட்டுப்பாடுகள் கடுமையாகப் பின்பற்றப்பட வேண்டும்" என அறிவுறுத்தப்பட்டது. (இ)



# உணவுக்காக 4 கிலோ மீற்றர் வீதியில் காத்துக்கிடந்த மக்கள்

(ஜொகனஸ்பேர்க்)

கொரோனாவால் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டதால் உணவுக்காக மக்கள் நீண்ட வரிசையில் 4 கிலோ மீற்றர் தூரம் காத்துக்கிடந்தனர்.

வைரஸ் பரவும் வேகத்தைக் கட்டுப்படுத்த உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் பொது ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது.

மேலும், பல்வேறு நாடுகளில் பெரும்பாலான நிறுவனங்கள் மூடப்பட்டு மக்கள் தங்கள் வேலைகளையும், வருமானத்தையும் இழந்துள்ளனர். இதனால் வறுமை காரணமாக போதிய உணவு கிடைக்காமல் பலர் உயிரிழக்கும் சூழல் உருவாகியுள்ளது.

இந்நிலையில் தென் ஆப்ரிக்காவிலும் வைரஸ் பரவி வருகிறது. அந்நாட்டில் 5 ஆயிரத்து 951 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. வைரஸ் தாக்குதலுக்கு அங்கு 116 பேர் பலியாகினர்.

வைரஸின் தாக்கம் தீவிரமடைந்து வருவதால் தென் ஆப்ரிக்காவில் மார்ச் 27 ஆம் திகதி முதல் பொது ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது. இதனால் பலர் வருமானம் இழந்து ஒரு வேளை உணவு கூட கிடைக்காமல் தவித்து வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டில் சென்சூரியன் பகுதியில் ஊரடங்கு காரணமாக உணவின்றி தவித்து வந்த மக்களுக்கு அரசு தரப்பிலும், சில தனியார் அமைப்புகளும் சேர்ந்து உணவு வழங்க ஏற்பாடு செய்திருந்தன.

இந்தத் தகவலை அடுத்து உணவுப் பொதிகளை வாங்க அப்பகுதியில் ஏராளமான மக்கள் குவிந்தனர்.

மக்கள் கூட்டம் அலை மோதியதால் அவர்கள் அனைவரும் நீண்டவரிசையில் நிற்க வைக்கப்பட்டனர். 4 கிலோ மீற்றர்களுக்கு நீண்ட அந்த மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் அதிகாரிகள் திணறினர்.

இந்தச் சம்பவம் ட்ரோன் கமரா மூலம் பதிவு செய்யப்பட்டது. மக்கள் உணவுக்காக நீண்ட வரிசையில் காத்துக்கிடந்த அந்தக் காணொலி சமூக வலைத்தளத்தில் வேகமாகப் பரவி வருகிறது. (இ)



# உயிருடன் உள்ளார் உன்



(பியோங்யாங்)

வட கொரியாவின் ஜனாதிபதி கிம் ஜாங் உன், இதய பாதிப்பால் மரணத்திற்காக போராடுகின்றார் அவர் இறந்து விட்டதாவும் அவர் எழுந்து நடக்க முடியாது இருப்பதாகவும் பல்வேறு யூகங்களில் செய்திகள் வெளியான நிலையில் நேற்று முன்தினம் திடீரென பொது நிகழ்ச்சியொன்றில் தனது சகோதரியுடன் கலந்து கொண்டதாக புகைப்படங்களுடன் செய்திகள் வெளியாகின.

வடகொரியாவின் சன்ச்சூனில் ஒரு தொழிற்சாலையை கிம் ஜாங் உன், நாடாவை வெட்டித் திறக்கும் நிகழ்வை வடகொரியாவின் அரச ஊடகம் புகைப்படத்துடன் கூடிய செய்தியாக வெயிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்களும் செய்தி வெளியிட்டன.

இந்நிலையில் கடந்த 20 நாட்களுக்குப் பின்னர் கிம் ஜாங் உன், பொது நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பல வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

வடகொரிய தலைநகர் பியோங்யாங் நகரிலுள்ள சன்ச்சூன் என்ற இடத்தில் பிரமாண்ட உர தொழிற்சாலை திறப்பு விழாவில் கிம் ஜாங் உன், தனது சகோதரியுடன் கலந்து கொண்டு நாடாவை வெட்டியதாக மத்திய கொரியன் செய்தி ஏஜென்சி புகைப்படங்களுடன் செய்தி வெளியிட்டது.

வடகொரியாவை ஸ்தாபித்த கிம் இல் சுங்கின் பிறந்த நாள் விழா ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி சூரியனின் நாள் என்ற பெயரில் ஆண்டுதோறும் அந்நாட்டில் விழாவாகக் கொண்டாடப்படும்.

இந்த விழாவில் வடகொரிய ஜனாதிபதி, உட்பட உயர் அதிகாரிகள் பங்கேற்பது வழக்கம்.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவியேற்றதிலிருந்து முதன்முறையாக இவ்வாண்டு இவ்விழாவில் கிம் ஜாங் உன், பங்கேற்கவில்லை. முக்கியமான நிகழ்வில் கிம் ஜாங் உன், பங்கேற்காதது அவரது உடல்நலம் குறித்து பாரிய சந்தேகத்தைக் கிளப்பியது.

எனினும் அண்டை நாடான தென்கொரியாவின் இணைய பத்திரிகையான டெய்லி என்.கே. ஏப்ரல் 12 ஆம் திகதி கிம் ஜாங் உன்னிற்கு இதய அறுவை சிகிச்சை நடந்ததாக தெரிவித்தது.

அதிகளவு புகைப்பிடித்தல், உடல்பருமன் மற்றும் அதிக வேலை காரணமாக கிம் ஜாங் உன்னிற்கு இதய பாதிப்பு ஏற்பட்டது.

ஹியாங்சன் கவுண்டியிலுள்ள ஒரு வில்லாவில் சிகிச்சை பெற்று வந்ததாகவும், கிம் ஜாங் உன்னின் உடல்நிலை மோசமடைந்து வருவதாகவும் செய்திகள் வெளியாகின. மேலும் அவர் மூளைச் சாவு அடைந்துவிட்டதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை, வடகொரியாவின் முன்னாள் தூதுவர் தே யாங் ஹோ சி.என்.என். செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், கிம் ஜாங் உன், வடகொரியாவின் தலைவர் மட்டுமல்ல. கிம் சங்கின் பேரனும் ஆவார். அவருக்கு உண்மையிலேயே அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதா? என எனக்குத் தெரியவில்லை.

ஒன்று மட்டும் நிச்சயமாக எனக்குத் தெரியும். அவர் உயிருடன் தான் இருக்கிறார். ஆனால் அவரால் எழுந்து கூட நிற்க முடியாத நிலை உள்ளது என வடகொரியாவின் முன்னாள் தூதுவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)



# கொரோனா தொற்றாளர்களுக்குச் சிகிச்சையளிக்க சோதனை செய்த மருந்தை உபயோகிக்க அனுமதி

(வோஷிங்டன்)

கொரோனாவைக் குணப்படுத்த மருத்துவ சோதனை செய்யப்பட்ட ரெம்டிசிவிர் (Remdesivir) என்ற புதிய மருந்தைப் பயன்படுத்த அமெரிக்கா அனுமதி அளித்தது.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் இருப்பவர்களுக்கு, வைரஸ் எதிர்ப்பு மருந்தான ரெம்டிசிவர் பலனளிப்பதால், அவற்றை அவசர சிகிச்சைக்குப் பயன்படுத்த அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் அனுமதி அளித்தது.

அமெரிக்க நிறுவனம் ஒன்று எபோலோவுக்காக எதிராக உருவாக்கப்பட்ட அன்டி வைரஸ் மருந்தை, சில மாற்றங்களுடன் கொரோனா வைரஸுக்கு எதிராக சோதனை செய்தது.



மூன்று கட்ட சோதனை முடிவில் ரெம்டிசிவர் என்ற அம்மருந்து நல்ல பலனளிப்பதாக தெரிய வந்தது. இதன் மூலம் அதிசய பலனை எதிர்பார்க்க முடியாவிட்டாலும், அவசர சிகிச்சையிலுள்ள நோயாளிகளுக்கு உதவுவதாக நிபுணர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் தேசிய தொற்று நோய்கள் நிறுவனம் ஆயிரம் பேர்களிடம் நடத்திய சோதனை முடிவுகளை வெளியிட்டது. அதில், சுவாச கோளாறு உள்ளவர்கள் இம்மருந்தால் விரைவில் குணமடைகிறார்கள். மற்ற மருந்துகளை விட, குணப்படுத்தும் நேரத்தை 31சதவீதம் இது விரைவாக்குவதாக அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் இதனை பெரியவர்கள் மற்றும் குழந்தைகளின் அவசர சிகிச்சைகளுக்குப் பயன்படுத்த அனுமதி வழங்கியது.

குறைந்த இரத்த ஒட்சிசன் அளவுடையவர்கள், ஒட்சிசன் சிகிச்சை தேவைப்படுபவர்கள், செயற்கை சுவாச கருவி (ventilator) உதவி தேவைப்படுபவர்களுக்கு, இம்மருந்தை செலுத்த அனுமதி அளித்தது. (இ)

# பிரளயம் போன்ற பட்டினி நோயை உலகம் விரைவில் எதிர்நோக்கும்

## உலக உணவுத் திட்டம் எச்சரிக்கை

(ஜெனிவா)

கொரோனா வைரஸ் தொற்று நோயுடன் உலகம் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்ற நிலையில், மிகவும் மோசமான பட்டினிக் கொடுமை நெருங்கிவந்து கொண்டிருக்கிறது.

உலகில் தற்போது நிலவும் பட்டினி நெருக்கடியை கொரோனா வைரஸ் பரவல் மிகவும் மோசமாக்கக்கூடும் என்று உலக உணவுத் திட்டம் (World Food Programme) எச்சரிக்கை விடுத்தது.

தற்போது உலகில் சுமார் 13 கோடி 50 இலட்சம் மக்கள் கடுமையான உணவுப்பற்றாக்குறையை எதிர்நோக்குகிறார்கள்.

சர்வதேச சமூகம் உணவு உற்பத்தியை அதிகரித்து அதன் விநியோகத்தையும் மேம்படுத்தாவிட்டால், இந்த வருட இறுதியளவில் கடுமையான உணவுப்பற்றாக்குறையை எதிர்நோக்குபவர்களின் எண்ணிக்கை 26 கோடி 50 இலட்சத்தைத் தாண்டக்கூடும்.

ஏமன், ஹொங்கோ ஜனநாயக குடியரசு, ஆப்கானிஸ்தான், வெனிசுவெலா, எதியோப்பியா, தென் சூடான், சூடான், சிரியா, நைஜீரியா மற்று ஹெய்டி ஆகிய நாடுகளிலும் இன்னும் பல நாடுகளிலும் ஆயுத மோதல்களும் பொருளாதார நெருக்கடியும் காலநிலை மாற்றமும் 2019 ஆம் ஆண்டில் இலட்சக்கணக்கான மக்களைச் சூறையாடும் பட்டினி நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருந்தன என்று உலக உணவுத் திட்டத்தின் உலகளாவிய உணவு நெருக்கடி தொடர்பான அறிக்கை சுட்டிக்காட்டியது.

வரட்சியாலும் வெட்டுக்கிளி மொய்ப்பினாலும் பாதிக்கப்பட்ட தெற்காசியாவின் பல பாகங்கள் கடந்த வருடம் கடுமையான பட்டினியால் அவலப்பட்டன. அத்தகைய அவலம் - கொரோனா வைரஸ் தொற்றுநோய் மற்றும் அதன் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளின் முழுமையான தாக்கம் கட்டவிழும்போது - எதிர் வரும் மாதங்களில் மேலும் ஆழமாகும் என்று எதிர்பார்க்கலாம்.

உலகம் " பிரளயம் போன்ற பட்டினி நோயை " எதிர்நோக்குகிறது என்று உலக உணவுத் திட்டம் எச்சரிக்கை விடுத்தது.

இது இரண்டாவது உலக மகா யுத்தத்துக்குப் பின்னரான மிகவும் மோசமான மனிதாபிமான அவலமாக இது மாறக்கூடும்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக, சமூக இடைவெளியைப் பேணுவதற்கு அரசாங்கங்கள் ஊரடங்கு உத்தரவுகளை நடைமுறைப்படுத்துகின்றன. ஊரடங்குகள் பொருளாதார செயற்பாடுகளை மூடியிருக்கின்றன. இதன் விளைவாக இலட்சக்கணக்கான மக்கள் வாழ்வாதாரத்திற்கு எந்த வழியுமின்றி உணவைக் கொள்வனவு செய்ய முடியாத நிலையில் தவிக்கின்றனர்.

விவசாய நடவடிக்கைகள் தாமதமடைந் திருக்கின்றன. தானியங்கள், பழவகைகள் மற்றும் மரக்கறி வகைகளின் உற்பத்தியும் அவை எளிதில் கிடைக்கக்கூடிய தன்மையும் ஏற்கெனவே வீழ்ச்சியடைந்திருக்கின்றன.

சீர்குலைக்கப்பட்ட விநியோக வழிகள் பாவனையாளர்களை உணவு வகைகள் எட்டுவதைத் தடுக்கின்றன. இவ்வாறாக, ஊரடங்குகள் உணவுப்பாதுகாப்பை இடர்பாட்டுக்கு உட்படுத்துகின்றன. உணவுத் தட்டுப்பாடும் பசி, பட்டினியும் உணவுக்கலகங்களை மூளவைக்கக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கின்றன.

உலகம் பூராகவும் அரசாங்கங்களின் ஆற்றல்களையும் வலிமையையும் கொரோனா வைரஸ் தொற்று நோய் கபளீகரம் செய்து கொண்டிருக்கும் அதேவேளை, பட்டினி "நோயை" அவற்றால் அலட்சியம் செய்ய முடியாது.

பட்டினிக்கொடுமை பெரும் எண்ணிக்கையில் மனித உயிர்களை பறிக்கக்கூடும். உணவு உற்பத்தியைத் தீவிரப்படுத்துவது முக்கியமானது, ஆனால் விநியோகச் செயன் முறைகளில் இருக்கின்ற பாரதூரமான குறைபாடுகள் காரணமாக, உலகின் பல நாடுகளில் நிரம்பி வழிந்த தானியக்களஞ்சியங்கள் பட்டினிக்கொடுமையை கையாளுவதற்கு உதவவில்லை. உணவு வகைகள் பதுக்கி வைக்கப்படாதிருப்பதை அல்லது கள்ளச்சந்தைக்கு திசைதிருப்பப்படாதிருப்பதை அரசாங்கங்கள் உறுதி செய்ய வேண்டும்.

நெருங்கிவரும் பட்டினி "தொற்று நோய்க்கு " எதிரான போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கு சர்வதேச ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். சில நாடுகள் அவற்றிடமிருக்கும் உணவு விநியோகங்களை மற்றைய நாடுகள் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கான கருவியாகப் பயன்படுத்துவதிலும் முனைப்புக்காட்டலாம். இது உணவை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவதற்கு ஒப்பானதேயன்றி, வேறொன்றும் இல்லை. அது மனச்சாட்சிக்கு மாறானதாகும்என உலக உணவுத் திட்டம் மேலும்எச்சரிக்கை விடுத்தது.(இ)

# 45 லீற்றர் கசிப்பு, 150 லீற்றர் கோடா கோப்பாய் குப்புலாவத்தையில் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் குப்புலாவத்தைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடமொன்று பொலிஸாரால் நேற்றுச் சனிக்கிழமை சுற்றிவளைக்கப்பட்டது.

எனினும் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லையெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வீரசிங்க தலைமையில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது குறித்த பகுதியில் 45 லீற்றர் கசிப்பு, 150 லீற்றர் கோடா மற்றும் கசிப்புக் காய்ச்சும் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவுக்கமைய தற்போது நாட்டிலுள்ள மதுபான நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ள நிலையில் பல பகுதிகளிலும் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-18)

# வன்னி பிரதிப்பொலிஸ்மா அதிபரால் உலருணவுப் பொருட்கள் வழங்கல்

(வவுனியா)

வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்தவின் நண்பர்களான "ஜெயபுர பிரண்ட்ஸ் கிளப்பின்" நிதி உதவியில் வவுனியா மடுக்கந்த, மற்றும் ஓமந்தை கிராமத்தில் வசிக்கும் பொது மக்களுக்கு உலருணவுப் பொருட்கள் நேற்று வழங்கப்பட்டன.

குறித்த உலருணவுப் பொதிகள், பிரதிப்பொலிஸ்மா அதிபர்



தம்மிக்க பிரியந்தவின் வழிகாட்டலில் வவுனியா மாவட்ட சமுதாய பொலிஸ் பிரிவின ஊடாக தெரிவு செய்யப்பட்ட பொது மக்களுக்கு வழங்கப்பட்டன.

(இ-299)

# இராசிபலன்

03.05.2020
சித்திரை20, ஞாயிற்றுக்கிழமை
ஏகாதசி பின்னிரவு 2.35 மணிவரை
பூரம் மாலை 6.02 மணி வரை
சுபநேரம்- 8.56 - 10.26 மணிவரை
இராகுகாலம்- 4.26 - 5.56 மணிவரை
சந்திராஷ்டமம்-அவிட்டம்,சதயம்
ஸ்மார்த்த ஏகாதசி விரதம்

**மேஷம்**
சுய முயற்ச்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க நினைப்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**ரிஷபம்**
சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், எந்த காரியத்தையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்**
பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகுவர், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், எடுத்த காரியங்கள் முன்னேற்றம்தரும்.

**சிம்மம்**
அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்ப பொறுப்புக்களும், சுமைகளும் வந்து சேரலாம், கற்பனை மிகுதியான நாள், வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள்.

**கன்னி**
எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், குடும்பத்தினை அனுசரித்து செல்வது நல்லது, விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள்.

**துலாம்**
புதிய பொருட்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**விருச்சிகம்**
பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்துசேரலாம், போசண சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும்நாள், குடும்பபணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு**
வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்றோர் சந்திப்புண்டு.

**மகரம்**
உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழபாட்டில் திருப்தி காண வேண்டிய நாள், திருடர் பயமுண்டு.

**கும்பம்**
விட்டுச்சென்ற உறவுகள் மீண்டும் வந்து சேரலாம் எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில்வாய்புக்கள் தேடி வரலாம், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்**
குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசண சுகமுண்டு.

நன்மதிப்பு நடத்தையை மாற்றும்